முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பரமானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

10.05.2019, வெள்ளிக்கிழமை

1. **சத்தியம் தனை மக்களிடை வளர்க்க**
   **சன்மார்க்கம் விதைத்து அருளுகின்ற**
   **சத்திய ஞான சபையாக கொண்ட**
   **சற்குருவே ஆறுமுக அரங்கனே**
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் **விகாரி தகரின் திங்கள்**
   **வரங்களென இருபானேழ் திகதி புகர் வாரம்**
   **(விகாரி வருடம் சித்திரை மாதம் 27ம் நாள் 10.05.2019, வெள்ளிக்கிழமை)**
   **வழங்குவேன் நித்ய பிரசன்ன ஆசி**
3. **ஆசிதனை பரமானந்தர் யானும்**
   அருளுவேன் உலகோர் நலம் பெற
   ஆசிபட அரங்கன் தருமவழி
   அணுகி தீட்சை பெறும் மக்கள்
4. மக்களெல்லாம் சத்திய நெறி பிறழா
   மகத்துவம் பெருகி சிறந்திடுவர்
   தேக்கமிலா சத்தியவான்களாகி
   தெய்வ பலம் பெற்றும் சிறப்பர்
5. சிறப்பான வழிகாட்டி அருளுகின்ற
   சிவராஜ யோகி அரங்கஞானி
   சிறப்பான தருமவேலிக்குள் வர
   செகமெங்கும் சத்திய தருமம் பரவி
6. பரவியே மக்களிடை எக்காலமும்
   பாதகமான லஞ்சலாவண்யமிலா
   தரணியே சகல துறைகளிலும்
   தரகு சூதக வரவு என்ற நிலை இல்லா
7. இல்லாத வண்ணம் தருமப்படி
   எல்லாத் துறைகளும் வளரும்
   வல்லமைபட செயல் வேகங்களும்
   வளர்ச்சிக்கான திட்டங்களும் உருவாகும்
8. ஆகவே அவரவர்கள் தானும்
   ஆன்ம பலமுற உண்மை நிலைபட
   யுகமெங்கும் சத்தியம் காத்து
   ஒருபோதும் சத்தியநெறி அகலா வாழ்ந்திடுவர்
9. வாழ்ந்திட இந்த கலியுகமே
   வளமுறும் இயற்கை பலம் பெறும்
   ஊழ் வெல்லும் சக்தி கூடியும்
   உயராசான் அரங்கன் ஆசி பெற

10. ஆசி பெற அன்னதான நெறியில்
அணுகி பொருளுதவி செய்து
நேசக்கரம் நீட்டி தொண்டாற்ற
நிலைத்தன்மை உலகில் பெறுவதுடன்

11. பெருமைபட வாழும் காலமே
பிரச்சனைகள் என்பது இல்லா
பெருமைமிக்க ஞானவாழ்வு பெறுவர்
புகன்றிவந்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பரமானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

சத்திய நெறியினை உலக மக்களிடையே வளர்த்து உண்மை நெறி சமுதாயமாக ஆக்கிடவே உலக மக்களிடம் சன்மார்க்க நெறியினை விதைத்து அருள் செய்து வழிநடத்துகின்ற தேசிகனே சத்தியஞான சபையாக ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினைக் கொண்டிட்ட சற்குருநாதனே முருகப்பெருமானின் அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 27ம் நாள் 10.05.2019, வெள்ளிக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பரமானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பரமானந்தர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து ஆசி பெற்று அரங்கமகான் கூறும் தருமத்தின் வழியில் நடந்து வர, அவர்களெல்லாம் சத்திய நெறியினின்று பிறழாமல் நடந்து அவர்களது மகத்துவம் பெருகி சிறப்படைவார்கள், தடையின்றி சத்தியவான்களாக ஆசி தெய்வபலத்தினைப் பெற்று சிறப்படைவார்கள்.

மக்களுக்கு சிறப்புமிக்க வழிகளைக் காட்டி வழிநடத்தி அருள் செய்து காக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சக்திமிக்க தருமவேலிக்குள் உலக மக்கள் வந்து விட்டால், உலகமெங்கும் சத்தியமும் தர்மமும் பரவி மக்களிடையே எக்காலத்திலும் அவர்களுக்குள்ளே லஞ்சலாவண்யங்கள் எல்லாம் மறைந்து பாதகம் இல்லாத நல்மக்களாய் ஆகி உலகமே சகல துறைகளிலும் தரகு எனும் கமிஷன் என்ற நிலை இல்லாமல், சூதகவரவு எனும் மறைவான கணக்கில் வராத வரவுகளும் இல்லாமல் நேர்மையுடனும் தர்மப்படியும் எல்லாத் துறைகளிலும் நடந்து வளர்ச்சியடையும், எல்லாத் துறைகளிலும் செயல்பாடுகள் வல்லமையுடனும் செயல் வேகத்துடனும் நடந்து வளர்ச்சிக்கான திட்டங்களும் விரைந்து உருவாக்கப்பட்டு விரைவாக செயல்படுத்தப்படும்.

ஆதலினால் அவரவர்களும் அவரவரின் ஆன்மா பலம் பெறும் பொருட்டு உண்மையுடன் நடந்து உலகினில் சத்தியத்தினை காப்பாற்றி ஒருபோதும் சத்தியநெறியினின்று அகலாமல் வாழ்ந்து சிறப்படைவார்கள். இவ்விதம் மக்கள் எல்லாம் சத்திய நெறி தவறாமல் வாழ்ந்திட, இந்த கலியுகமே துன்பநிலையிலிருந்து மீண்டு வளம் பெறும். இயற்கையும் சாதகமாக இயங்கி இயற்கைபலம் பெருகி வளமையும் பசுமையும் உலகமெங்கும் பெருகிடும், மக்களுக்கு ஊழ்வினைகளை வெல்லும் சக்தியும் பெருகி ஊழையும் வெல்வர்.

உயர் ஆசான் ஆறுமுக அரங்கமகானின் அருளாசிகளை பெற்றிட அவரவரும் அன்னதான நெறியினில் சென்று அரங்கர் மேற்கொள்ளும் அன்னதான பணிகளுக்கு பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் வந்து, நிலைத்தன்மையாகிய மரணமிலாப் பெருவாழ்வை பெறும் வாய்ப்பை பெற்று பெருமையுடன் வாழும் காலத்திலேயே பிரச்சனைகள் ஏதும் இல்லாத பெருமைமிக்க ஞானவாழ்வினை பெற்று சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் பரமானந்தர்.

–சுபம்–